## November 25, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உச்சநீதிமன்றத்தின் 53-ஆவது தலைமை நீதிபதியாக சூர்ய காந்த் பதவியேற்றார். தில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அப்போது, 'கடவுளின் பெயரில்' என ஹிந்தியில் அவர் உறுதிமொழி ஏற்றார்.
   i. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த பி.ஆர்.கவாய் பணி ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, புதிய தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் பதவியேற்றார். இவர் அடுத்த 15 மாதங்கள் இந்தப் பதவியை வகிப்பார். 2027-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-இல் பணி ஓய்வு பெறுவார்.
   ii. கொலீஜியம்: உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியே பதவியேற்றுள்ள சூர்ய காந்த், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் நீதிபதி காலிப் பணியிடங்களுக்கு பெயர்களைத் தெரிவு செய்து மத்திய அரசுக்கு பரிந்துரைக்கும் உச்சநீதிமன்ற கொலீ ஜியங்களுக்கு தலைமைவகிக்க உள்ளார். உச்சநீதிமன்ற நீதிபதி காலிப் பணியிடங்களுக்கு பெயர்களைப் பரிந்துரை செய்யும் இவர் தலைமையிலான கொலீஜியத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத், பி.வி.நாகரத்னா, ஜே.கே. மகேஸ்வரி, எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் இடம்பெற உள்ளனர். உயர்நீதிமன்ற நீதிபதி காலிப் பணியிடங்களுக்கு பெயர்களைப் பரிந்துரை செய்யும் இவர் தலைமையிலான கொலீஜியத்தில் நீதிபதிகள் விக்ரம் நாத், பி.வி.நாகரத்னா ஆகியோர் இடம்பெறுவர்.
2. ஆஸ் திரேலியாவைப் போலவே, 16 வயதுக்கு உட்பட்டவர்கள் சமூக ஊடகங்கள் பயன்படுத் துவதைத் தடை செய்யவிருப்பதாக மலேசியாவும் அறிவித்துள்ளது. இது குறித்து தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஃபஹ்மி ஃபட்ஸில் கூறியதாவது:
   i. வரும் 2026-லிருந்து 16 வயதுக்குள்பட்டவர்கள் சமூக ஊடகக் கணக்குகள் வைத்திருப்பதைத் தடைசெய்ய முடிவு செய்துள்ளோம். இணையம் மூலம் மிரட்டுதல், மோசடி, பாலியல் சுரண்டல் போன்ற இணையவழி ஆபத்துகளில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்தத் தடை அமல்படுத்தப்படும்.
   ii. இது தொடர்பாக ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் எடுத்துள்ள நடவடிக்கைகளை ஆராய்ந்து வருகிறோம். 1 அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு (பாஸ்போர்ட் மூலம் வயதை உறுதிப்படுத்தும் மின்னணு சரிபார்ப்பு முறைகளை பரிசீலிக்கிறோம் என்றார் அவர்.
   iii. உலகிலேயே முதல் முறையாக சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டுக்கு ஆஸ்திரேலியா விதித்துள்ள தடை டிசம்பர் 10 முதல் அமலுக்கு வருகிறது. அதன்படி, ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம்ஸ்னாப்சாட், டிக்டாக், எக்ஸ் உள்ளிட்ட தளங்கள் 16 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் கணக்குகள் வைத்திருப்பதைத் தடுக்கத் தவறினால் அந்தத் தளங்களுக்கு 5 கோடி ஆஸ்திரேலிய டாலர் (சுமார் ரூ.288 கோடி) அபராதம் விதிக்கப்படும்.
   iv. டென்மார்க்கும் நார்வேயும் கூட 15 வயதுக்குள்பட்ட பயன்படுத்த தடைவிதிக்கருப்பதாக அறிவித்துள்ள நினைவுகூரத்தக்கது.
3. டேவிஸ் கோப்பை ஆடவர் அணிகள் டென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில், இத்தாலி 2-0 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி சாம்பியன் ஆனது.
   i. தொடர்ந்து 3-ஆவது முறையாக (ஹாட்ரிக்) கோப்பை வென்றுள்ள அந்த அணிக்கு, ஒட்டு மொத்தமாக இது 4-ஆவது சாம்பியன் பட்டமாகும் (1976,2023,2024, 2025). எனினும், இத்தாலி தனது சொந்த மண்ணிலேயே இந்தக் கோப்பையை வென்றது இதுவே முதல்முறை.

4. இந்தியாவில் முதன்முறையாக நடைபெறவுள்ள ட்ராக் ஏசியா கப் 2026 சைக்கிளிங் போட்டிக்கான இலச்சினை, சின் னம் அறிமுகம் செய்யப்பட்டுள் ளது.
    i. வரும் 2026 ஜனவரி 29 முதல் 31 வரை சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளா கத்தில் ட்ராக் ஏசியா கோப்பை சர் வதேச சைக்கிளிங் போட்டி நடைபெறுகிறது.
5. நிகழாண்டு செப்டம்பர் வரை தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பான 'கவச் 4.0' தொழில்நுட்பம் 654 கி.மீ. தொலைவிலான ரயில் பாதையில் பொருத்தப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் (ஆர்டிஐ) கேட்கப்பட்ட கேள்விக்கு ரயில்வே அமைச்சகம் பதிலளித்தது.
    i. குறிப்பிட்ட வேகத்தில் ரயில்களை ஒட்டுநர்கள் இயக்கத் தவறும்பட்சத்தில் தாமாகவே பிரேக்கை செலுத்தி ரயிலை நிறுத்த கவச் தொழில்நுட்பம் உதவுகிறது. மேலும் ஒரே தண்டவாளப் வாதையில் ரயில்கள் மோதி ஏற்படும் விபத்துகளைத் தடுக்கவும் சிக்னல்களை கடக்கும்போதும் பாதுகாப்பு வழங்குகிறது.
    ii. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த தொழில்நுட்பம் 2016, பிப்ரவரியில் பயணிகள் ரயிலில் சோதனைக்காக பொருத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 2020, ஜூலையில் தேசிய தானியங்கி ரயில் பாதுகாப்பு (ஏடிபி) அமைப்பாக கவச்' தொழில்நுட்பம் முழு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.
6. நீர்மூழ்கிக் கப்பல்களை தாக்கி அழிக்கும் 'ஐஎன்எஸ் மாஹே' வகை போர்க்கப்பல் முதல்முறையாக இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.
    i. கேரள மாநிலம் கொச்சியில் உள்ள கொச்சி கப்பல் கட்டுமான நிறுவனத்தால் ஐஎன்எஸ் மாஹே கட்டமைக்கப்பட்டுள்ளது.
    ii. உள்நாட்டிலேயே போர்க்கப்பல்களை உருவாக்கும் தற்சார்பு இந்தியா திட்டத்தின்கீழ் மொத்தம் 8 மாஹே வகை நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல்கள் இணைக்கப்படவுள்ளன.
7. உத்தர பிரதேச மாநிலம், அயோத்தியில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலின் கட்டுமானம் நிறைவடைந்ததையடுத்து, அதன் 161 அடி உயரமுள்ள பிரதான கோபுரத்தின் உச்சியில் பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (நவ. 25) காவிக்கொடியை ஏற்றவுள்ளார்.
8. தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் (எப் டி.ஏ) பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க இந்தியா-கனடா ஒப்புக்கொண்டதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
    i. இந்த ஒப்பந்தம் கையொப்பமானால் இருநாடுகளிடையேயான இருதரப்பு வர்த்தகம் 2030-க்குள் ரூ.4.4 லட்சம் கோடியாக உயரும் எனவும் அவர் தெரிவித்தார்.
    ii. கனடா பிரதமராக ஜஸ்டின் ட்ருடோ இருந்த 2023 கால கட்டத்தில் இந்தியா-கனடா இடையேயான தடையற்ற வர்த்த ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தடைபட்டது.